உ
சிவமயம்

**இன்றெடுத்த இப்பணியும் இனி தொடரும் எப்பணியும்
சண்முகனார் தன்னுடனே நீ எழுந்து - என் பணியை
உன்பணியாய் எடுத்தாட் கொண்டு எமைக் காக்க வேண்டும்
பொன்வயிற்றுக் கணபதியே போற்றியெனப் போற்றுகின்றேன்.**

# ஆசிரியர் பக்கம்

தனவைசிய சங்கத்தின் அன்பு இதயங்களே,

சங்கம் தனது பொன்விழா ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. இனிவரும் ஆண்டுகளில் சங்கம் புது உத்வேகத்துடன் செயல்பட நமக்கு அருள்புரியுமாறு எல்லாம் வல்ல செந்தூல் ஸ்ரீ தண்டாயுதபாணியை வேண்டுகிறேன். பொன்விழா நிகழ்வுகள் நடைபெறும் தேதிகளில் ஒரு சிறு மாற்றம். பொன்விழா கொண்டாட்டங்கள் இவ்வாண்டு டிசம்பர் 8 மற்றும் 9 தேதிகளில் நடைபெறும்.

சென்ற இதழுடன் விவரக் கையேட்டின் படிவங்கள் உங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. உறுதிபடுத்தப்பட்ட படிவங்களை எங்களுக்கு 31-12-2006க்குள் திரும்ப அனுப்புமாறு கேட்டிருந்தோம். மிகவும் குறைவானவர்களே அவ்வாறு செய்திருந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் மிக்க நன்றி. உங்கள் விவரங்கள் சரியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் உறுதிப்படுத்துமாறு கேட்டிருந்தோம். உங்கள் ஒத்துழைப்பு குறையும் போது எங்களின் பணி செய்யும் வேகமும் உற்சாகமும் குன்றி விடுகிறது. ஆனால் முடிந்த வரைக்கும் வெளியிடப்படும் விவரங்கள் சரியானதாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். எனவே, செயற்குழு உறுப்பினர்களும், வட்டார பிரதிநிதிகளும் இன்னும் படிவங்களை அனுப்பாதவர்களை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு விவரங்களை சரிபார்த்து வருகிறார்கள். இதன் காரணமாக புதிய விவரக்கையேடு மே மாதத்தில் தான் வெளியிட இயலும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மையில் நம் நாட்டில் நடந்த ஒரு துயர சம்பவம் சங்கத்தின் கவனதுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தென் மாநிலம் ஒன்றில் ஆதரவற்ற நிலையில் வறுமையில் வாழ்ந்து வந்த நகரத்தார் ஒருவர் முதுமை காரணமாக இறந்துள்ளார். அவரின் இறுதி சடங்கை செய்ய அவ்வூரில் வசித்து வந்த நகரத்தார்கள் முன் வரவில்லை என்று அறிகிறோம். நல் உள்ளம் கொண்ட ஒரு நகரத்தார் மட்டும்

தன் மற்ற இந்திய நண்பர்கள் உதவியுடன் அவரின் இறுதி சடங்கை செய்து, தமிழகத்தில் உள்ள அவரின் உறவினர்களுக்கும் விவரத்தை தெரிவித்துள்ளார். அவருக்கு சங்கத்தின் சார்பில் நன்றி.

இச்சம்பவம் உரிய நேரத்தில் சங்கத்தின் கவனதுக்கு கொண்டு வரபட்டிருந்தால் சங்கமே அவரை உரிய மரியாதையுடன் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்திருக்கும். இந்நாட்டில் இது போன்ற சம்பவங்கள் இனி ஏற்படக்கூடாது என்பதே நம் பிரார்த்தனை. எனினும் அவ்வாறு ஏற்பட்டால் அப்பகுதியில் வசிக்கக்கூடிய நகரத்தார்கள் சங்க செயற்குழுவின் கவனத்துக்கு அதை கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம். உரிய கடமையை செய்ய தனவைசிய சங்கம் என்றுமே தயங்காது என்பதை இந்நாட்டில் வசிக்கக்கூடிய நகரத்தார்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி. வணக்கம்.

**மா. மெய்யப்பன்**

## PLEDGES RECEIVED FOR SHARE CAPITAL IN KOPERASI THANAVAISYA KUALA LUMPUR BERHAD
**(continued)**

| Sl. No. | Name | RM |
|---|---|---|
| | As of 1.12.2006 | 466,700.00 |
| | Singaram. SP. Dr (Additional) | 9,500.00 |
| | Kanagasabai. V (Additonal) | 2,000.00 |
| 92 | SP.Thiagarajan | 10,000.00 |
| 93 | Ramanthan A/L SM.Ramanathan | 6,000.00 |
| 94 | Muthappan A/L Ramanathan | 1,000.00 |
| 95 | R.Rama Raghavan | 1,000.00 |
| 96 | R.Ramanathan @ Manikandan | 500.00 |
| 97 | Ramanthan A/L Lakshmanan | 500.00 |
| 98 | Muthu A/L VM.Palaniappan | 500.00 |
| 99 | Subramaniam A/L AR.A.Nachiappan | 500.00 |
| | **As of 1.3.2007** | **498,200.00** |

# PRESIDENT'S MESSAGE

*Dear Members*

My congratulations to **Mr. R. Palaniappan**, who has secured an overseas assignment. As this assignment is for a long period, he had to tender his resignation from the post of Ass. Hon. Treasurer and the Management Committee of our Sangam. His contributions to the Sangam were enormous. On behalf of the members of Sangam, I wish him success in his career. I am sure that on his return, he would participate actively again in Sangam's projects.

Organisers of the annual event, **'Pillaiyar Nonbu'**, **Mr. Y.RM. Andiappan**, **Mr. M. Sethuraman** and **Mr. M. Ganesan**, **the veterans of our Sangam**, carried out the function splendidly. I thank the organisers and the participants very much for making this event cheerful.

The trip to **Teluk Batek Beach** was organised **superbly** by **Mrs. Meena Ramanathan** and **Mrs. Sutha Lakshmanan.** Those who joined the excursion enjoyed thoroughly and on behalf of the participants of the trip and members of Sangam we say **'syabas & thank you'** to **Mrs. Meena Ramanathan and Mrs. Sutha Lakshmanan and their family members** who helped very much for the success of this trip.

The **International Convention of Nagarathars** organising committee has had a series of meetings and shall inform members of the progress soon. **I urge every member, to help to make this function a memorable event**.

**Koperasi Thanavaisya Kuala Lumpur Berhad's** activities are running smoothly and on behalf of the Board of Directors and members of Koperasi, I thank the **Trustees**, **Management Committee Members** and **Members** of **Selva Vinayagar Temple Seremban**, **Sri Thandayuthapani Temple Sentul Kuala Lumpur**, **Thendayuthapani Temple Klang** and **Thanneermalai Andavar Temple Penang** for their assistance and help given to Koperasi to put-up the shops during the festivals of these temples, to sell the snacks produced by Koperasi.

Best wishes to all of you.

**M. Chinnadurai**

# செயலகத்திலிருந்து

அன்புடையீர்,

வணக்கம்.

புதிய செயற்குழுவின் நான்காவது செய்திக் கடிதம் இது. எங்கள் செயற்குழு இந்தச் செய்திக் கடிதத்துடன் ஓர் ஆண்டு பணியினை நிறைவு செய்து இருக்கிறது. இனி நடைபெற்ற, நடைபெற இருக்கும் நிகழ்ச்சிகளைத் தொகுத்து தருகின்றேன்.

**<u>பிள்ளையார் நோன்பு (25-12-2006)</u>**

செந்தூல் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவில் செட்டியார்கள் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் 280 நபர்கள் இழை எடுத்துக் கொண்டார்கள். இந்த நிகழ்வை சிறப்பாக நடத்தி தந்த திரு. Y.RM. ஆண்டியப்பன், திரு. M. சேதுராமன், திரு. முரு. கணேசன் ஆகியோருக்கு சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**<u>தெலோக் பாத்தேக் கடற்கரை சுற்றுலா (20-1-2007)</u>**

ஒருநாள் சுற்றுலாவாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சுற்றுலாவில் 55 பேர்கள் கலந்து கொண்டார்கள். இதனை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தி தந்த திருமதி மீனா இராமனாதன் மற்றும் திருமதி. சுதா லெட்சுமணன் ஆகியோருக்கு சங்கத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதைப்பற்றிய முழு விபரம் வேறு பக்கத்தில் தந்து இருக்கிறோம்.

**<u>காசிப் புனிதப் பயணம் (17-2-2007 - 3-3-2007)</u>**

17-2-2007 அன்று மலேசியாவில் இருந்து புறப்பட்ட இந்தக் குழுவினர் சென்னை வழியாக டெல்லி சென்று பின் அங்கிருந்து ஹரித்துவார், ரிஷிகேஷ், கயா, புத்தகயா, காசி, அலகாபாத், ஆக்ரா, மதுரா மற்றும் ஜெய்ப்பூர் ஆகிய நகரங்களை பார்த்து விட்டு 3-3-2007 அன்று சென்னை வந்தடைவார்கள். இச்சுற்றுலாவை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தி தந்த திருமதி சாலா தியாகராஜன் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



jan-07.pmd 6 3/1/2007, 9:04 PM

**<u>24வது ஆண்டுப் பொதுக்கூட்டம் (25-3-2007)</u>**

நமது சங்கத்தின் 24வது ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25-3-2007 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு கோலாலம்பூர் செந்தூல் ஸ்ரீ ஸ்ரீ தண்டாயுதபாணி கோவில் செட்டியார்கள் மண்டபத்தில் நடைபெற இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வந்து கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். ஆண்டுக் கூட்டம் பற்றிய விரிவான செயலாளரின் அறிக்கை, கணக்கறிக்கை ஆகியவை இந்த செய்திக் கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>திருமதி PL. உமையாள் ஆச்சி கல்வி விருது வழங்கும் விழா (19-5-2007)</u>**

கடந்த ஆறு ஆண்டுகளாக 130 மாணவர்கள் தங்கள் தேர்வுகளில் சிறப்பாக தேர்ச்சி பெற்றதற்காக அவர்களை பாராட்டி ஊக்கப்படுத்திய இவ்விழா இந்த ஆண்டும் டான்ஸ்ரீ சோமா அரங்கில் எதிர்வரும் 19-5-2007 சனிக்கிழமை அன்று நடைபெற உள்ளது.

மீண்டும் அடுத்த செய்திக் கடிதத்தில் சந்திப்போம்.

நன்றி.

வணக்கம்.

அன்புடன்,
**பெ. இராமன்**
கௌரவ செயலாளர்




கோலாலம்பூர் திரு. K. பழயனியப்பன்-செண்பகவள்ளி (உ.எண்: 37/ ப.எண்: 232) தம்பதிகளின் மகள் PL. வாணி - K. இராமசாமி தம்பதிகளுக்கு கடந்த 28-12-2006 அன்று அமெரிக்கா செயிண்ட் ஜோசப் மிக்சிகன்னில் ஆண்குழந்தை பிறந்துள்ளது. குழந்தைக்கு இனியன் கிருஷ்ணன் என்று பெயரிட்டுள்ளார்கள்.

***குழந்தை எல்லாச் செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.***

# கல்விப்பணியில் நகரத்தார்கள்

கடவுள் வாழ்த்து

காக்கும் கணபதியின் கரம் பற்றி
காவல் தெய்வத்தின் அடிபோற்றி
கவிபாட வந்த என்னை காத்தருள்
கவி மழையாக

நம் முன்னோர்களை எண்ணி வியக்கிறேன்
வட்டித் தொழில் ஒன்றை வாழ்வாய் கொண்டவர்கள்
பட்டி தொட்டி யெல்லாம் படிப்பறிவு வளர்ப்பதற்கு
திட்ட மிட்ட தூர நோக்கை யெண்ணி வியக்கிறேன்.

வருங்காலச் செட்டி மகன் வையகத்தில் மாண்புடனே
மருத்துவராய், வழக்கறிஞராய், கணித்துவ நிபுணராய்
விஞ்ஞானியாய், திருத்தமுடன் வாழ்வதற்கு வழி கண்டார்
கல்வி யெனும் பயிர் வளர்த்தார் பார் புகழ வாழ்வதற்கே

ஊருக்கு ஒரு பள்ளி உருவாக
வேண்டும் என்று
ஊக்கத்துடன் உழைத்திட்டு
உருவாக்கினர் பல பள்ளி தன்னை

பாருக்குள் கல்வி தனை
பாங்காக தந்த தினால்
பல்கலைக் கழகம் பல கட்டி
பட்டங்கள் பல பெற திட்டங்கள் தீட்டி

தாய் தந்தை பெயர் சூட்டி, வீட்டுக்கு
ஒரு மகனை வெளி நாட்டில் குடி அமர்த்தி
நாட்டுக்கும், வீட்டுக்கும் நலம் பல செய்ததாலே
நாடு போற்றும் நகரத்தார்கள் ஆனார்கள்.

பர்மா, சிங்கப்பூர் மலேசியா என்று
பாட்டனார்கள் கொண்டு வித்தாலும்
பல்கலைக் கழகங்கள் கட்டியது என்னவோ
பாரத நாட்டில் தானே

பாட்டனார்கள் தீர்க்க தரிசிகள்
படித்த பட்டத்தை பாரத நாட்டினிலே
கொடுத்து விட்டால், பார்புகழும் என்று
பழங்காலத்திலே அறிந்து

*பள்ளிகளோ பலப் பல, பல்சுவைக் கழகமோ*
*இரண்டு என்று இந்தியாவில் நகரத்தார்கள்*
*இயங்கினார்கள் எண்ணிக்கையில் சிறிதாக இருந்தாலும்*
*ஏற்றமுடன் வாழ்க்கையை, ஏற்படுத்திக் கொடுத்ததினால்,*
*கவி பாடி நிற்க்கின்றோம் கல்வியிலே நகரத்தார்கள் என்று*

*பல்கலைக்கழகங்கள் அண்ணாமலையும் அழகப்பாவும்*
*பல ஆயிரம் நகரத்தாரை பட்டதாரி ஆக்கி*
*பாருக்கு தந்ததினால், சில மையில் தூரம் சிறகடித்து பறந்து*
*பல மையில் தூரம் பறந்து சென்று*
*நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை பல செய்து*
*நாடு போற்றும் நகரத்தார் ஆனார்கள்.*

*திட்டங்கள் போட்டு பட்டங்கள் பல பெற்று*
*திக்கெட்டும் சென்று திரட்டுகின்ற*
*செல்வம் எல்லாம் திரும்பி*
*சென்னைக்கே அனுப்பி*

*சிங்காரச் சென்னையில், செந்தமிழ் நாட்டில்*
*சிறப்பாக வாழ்வதற்கு*
*பொறுப்பாக காரியங்கள் பல*
*சிறப்பாகச் செய்தார்கள்*

*அது தானே நகரத்தார்களின் நற்பண்பு*
*எனக்கோர் ஆசை உண்டு*
*இன்னும் பல்கலைக் கழகங்கள்*
*பல நூறு கண்டிடனும் படித்த நம் மக்கள்*

*பண்புடனே முன் வந்து நம் இனத்தை*
*அன்புடனே அரவணைத்து*
*அகிலம் போற்றும் நகரத்தார்கள் ஆயிடனும்*

*கல்விப் பணியிலே நகரத்தார்கள் என்று*
*கவி பாட வந்த எனக்கு*
*காலம் தான் போத வில்லை*
*நிறைவாக ஒன்று சொல்வேன்*

*கல்வி பல கற்றாலும் கப்பல் ஏறி வந்தாலும்*
*காசு பணம் சேர்த்தாலும் கடைசி வரை காப்பான்*
*கண் கண்ட தண்டாயுத பாணியே!*

*நன்றி. வணக்கம்!*

*(சிங்கப்பூர் நகரத்தார் சங்கம் நடத்திய இலக்கிய விழா*
*(14.10.2006) கலியரங்கத்தில் நம் சங்க செயலாளர்*
*திரு. பெ. இராமன் படைத்த கவிதை)*

# தெலோக் பத்தேக் -ஒரு நாள் பயணம்

ஏற்கனவே அறிவித்திருந்தபடி தெலுக் பத்தேக் ஒரு நாள் கடற்கரை பயணத்தை கடந்த ஜனவரி மாதம் 20-ம் தேதி சனிக்கிழமை மேற்கொண்டோம்.

மொத்தம் 55 பேருடன் (11 சிறார்கள் உட்பட) ஒரு பேருந்து மற்றும் இரு கார்களில் பயணத்திற்கு தயாரானோம். நம் வேண்டுகோளுக்கு இணங்க அனைவரும் காலை 5.40 மணிக்கெல்லாம் நம் கோயிலில் கூடியிருந்தது குறிப்பிடத்தக்கது. 5.00 மணிக்கு பேருந்து சிரம்பானிலிருந்து புறப்பட்டு 12 பேரை ஏற்றிக்கொண்டு சுமார் 6.00 மணி அளவில் நம் கோயில் வளாகத்திற்கு வர அனைவரும் காப்பியை அருந்தி விட்டு பேருந்தில் ஏறினார்கள். சரியாக 7.00மணிக்கு பயணத்தை தொடங்கினோம்.

காலை மணி 8.30 அளவில் Behrang நெடுஞ்சாலை ஓய்வெடுக்கும் இடத்தில் அனைவருக்கும் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. பேருந்தில் “திருவிளையாடல் ஆரம்பம்” என்ற திரைப்படத்தைக் கண்டு களித்தவாறே சுமார் 11.00 மணியளவில் கடற்கரையைச் சென்றடைந்தோம். அங்கு ஈப்போ நகரத்தார்கள் சூடான காப்பியுடன் எங்களை வரவேற்றனர். கடல் நீர் குளிப்பதற்கேற்ப தூய்மையாக இருந்ததால் அனைவரும் நன்கு குளித்து மகிழ்ந்தனர். பிறகு 2.00 மணியளவில் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. தொடர்ந்து பிள்ளைகளுக்கான விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டு, தலைவர் திரு. சின்னதுரை அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள். கலந்து கொண்ட எல்லா குடும்பங்களுக்கும் நினைவுப் பரிசாக துண்டு ஒன்று வழங்கப்பட்டது. திருமதி கீதா ஜெயபாலன் அவர்கள் சிலரை கடைத்தெருவுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு பாய், T-சட்டை, நினைவுச் சின்னம் என பல பொருட்களை வாங்கி மகிழ்ந்தனர்.

மாலை மணி 4.30 அளவில் மஃபின், மீகூன், முறுக்குப் பையுடன் சூடான மைலோ மற்றும் தேநீரோடு இடைப்பலகாரத்தை முடித்துக் கொண்டு “Bagan Datuk”வில் உள்ள ராமர் கோயிலை நோக்கி பயணத்தை தொடர்ந்தோம் வழியில் சிலர் நெத்திலி, புளிப்பு மிட்டாய் என பல பொருட்களை வாங்கி மகிழ்ந்தனர்.

பேருந்தில் திரு. சின்ன வள்ளியப்பன் அவர்கள் திறமையை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்தி அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள். பேருந்தினுள் அனைவருக்கும் நொறுக்குத்தீனி வழங்கப்பட்டது.

சுமார் 6.30 மணியளவில் ராமர் கோவிலை அடைந்தோம். அமைதி மற்றும் அழகுடன் கூடிய ஸ்ரீ ராமபெருமானை தரிசித்து அனைவரும் சேர்ந்து பொது அர்ச்சனையும் செய்தோம். அனைவரும் கோயிலை சுற்றிப் பார்த்து, புகைப்படங்களும் எடுத்துக் கொண்டு, கோலாலம்பூரை நோக்கி பயணத்தைத் தொடர்ந்தோம். வரும் வழியில் Behrang நெடுஞ்சாலை ஓய்வெடுக்கும் இடத்தில் அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

இப்பயணத்தை எங்களுடன் இணைந்து சிறப்புற நடத்திக் கொடுத்த தலைவர் திரு. சின்னதுரை அவர்களுக்கும், எங்கள் பெற்றோர்களுக்கும், திரு. சின்னவள்ளியப்பன், திரு. பழனியப்பன், டாக்டர் ஜெயபாலன், திரு. தண்ணீர்மலை, திரு. ஆண்டியப்பன், திரு. சுப்பிரமணியம், திரு. ராமன் ஆகியோருக்கும் இவ்வேளையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*திருமதி. சுதா லெட்சுமணன்*
*திருமதி மீனா ராமநாதன்*

# புதுமனை புகு விழா

பட்டர்வொர்த் பாபு கிருஷ்ணமூர்த்தி மீனாட்சி தம்பதிகள் (உ.எ:961/ ப.எண்:112) தங்கள் புதிய இல்லத்தின் புதுமனை புகுவிழாவை கடந்த 29-1-2007 அன்று சிறப்பாக நடத்தினார்கள். இவர்களுக்கு சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.



# மணி விழா

நிபோங் தெபால் (தமிழகம் சண்முகநாதபுரம்) திரு. வீர. நாகப்பன்-சொர்ணவள்ளி தம்பதிகளின் மணிவிழா கடந்த 28-12-2006 அன்று தமிழகம் சண்முகநாத புரத்தில் விமரிசையாக நடைபெற்றது.

**மணி விழா தம்பதிகள் நீண்ட ஆயுளுடன் சீரும் சிறப்புமாக வாழ சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.**

# Report from the Chairman of the Social Welfare Committee

***Dear Members,***

I thank the MTA management committee for appointing me to head the Social Welfare committee and the confidence they had in me.

The following members will serve in this sub committee:

1. Datuk Dr V.Kathiresan (Chairman)
2. Dato P.Kasi
3. Mr M.Krishnan
4. Mrs. Pitchammai Venkatachalam
5. Mrs Chandra Selvam
6. Mrs Jayanthi Somasundaram
7. Mr Nachiappan Arunachalam

The objective to form this Social and Welfare committee is to improve the values and qualities in the lives of our community members in the following areas.

1. Education
2. Career development
3. Medical awareness
4. Social Problems

The sub committee had its first meeting on 23rd October 2006 and came out with the following action plan to start with among others:

1. **Education:**
   It was decided to conduct Educational Counselling programs for the School leaving children (SPM, STPM, A Level, Matriculation, and or any other equivalent course that the students may undertake) to further their studies and to give them professional guidance to choose the right field of their interest at the right place.

2. **Career Development**:
   Upon completion of their tertiary education to give our children proper guidance and direction to pursue and develop their career based on

their qualification. This includes entrepreneurship guidance and/or job opportunities.

3. **Medical**
To improve the medical awareness among our community members and to help them with proper guidance when the need arises. To conduct free medical camps for basic health screening and arrange Medical awareness talks.

4. **Social**
The committee recognizes that the most important social problem currently faced by our community is the high incidence of Matrimonial Failures. We discussed at length the various means to overcome this problem.

To start with, the committee proposes to conduct Pre-Marital Counseling for the youths of our community. This will be conducted with the help of experienced personnel in this field. Currently, the Malaysian Hindu Sangam is already conducting this programme for the benefit of the Hindus in Malaysia. The committee also wishes to inform that this programme is mandatory in other religions like Christianity and Islam.

Whether we succeed in achieving our objectives purely depends on the support we receive from you all. Therefore, I urge all of you to support us by sending your children to these programmes. The details of these programmes will be notified either through the News Letter or E-Mail, as and when organized.

***Datuk Dr V.Kathiresan***

# வைர ஆபரண கண்காட்சி

சென்னையை சேர்ந்த மீனு சுப்பையா அவர்கள் எதிர்வரும் 11-3-07 அன்று மாலை 4.00 மணி முதல் 7.00 வரை கோலாலம்பூர் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவில் செட்டியார்கள் மண்டபத்தில் வைர ஆபரண கண்காட்சி ஒன்றை நடத்த உள்ளார்கள். இக்கண்-காட்சிக்கு அனைவரும் வந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

# பிள்ளையார் நோன்பு



வேழ முகத்து விநாயகனை தொழ வினைகள் அகலும் என்பதற்கு ஏற்ப முழுமுதற் கடவுளை வணங்கியே எதையும் துவங்கும் பழக்கம் நம் நகரத்தார்களிடையே ஊறிப்போன ஒன்று. எதை எழுதத் தொடங்கினாலும் பிள்ளையார் சுழி போட்டுத்தான் தொடங்குவது நமது வழக்கம். அதைப்போலவே எந்த செயலைத்தொடங்கினாலும் பிள்ளையாரை வணங்கித் தொடங்குவது நகரத்தார்களாகிய நம் பழக்கம்.

தனவைசிய சங்கத்தின் சார்பில் ஆண்டு தோறும் பிள்ளையார் நோன்பை சீரும் சிறப்புமாக பக்தியுடன் விமரிசையாக கொண்டாடி வருகிறோம். இந்த நன்னாளில் ஒவ்வொரு நகரத்தாரும் தும்பிகை யானை வேண்டி இழை எடுத்துக் கொள்வது கட்டாயமான ஒன்று. அக்காலத்தில் 21 நாட்கள் விரதம் இருந்து யானை முகத்தோனை துதித்து நாளுக்கு ஒரு நூலாக 21 நூல் எடுத்து வைத்த பின், 21வது நாள் விரதம் பூர்த்தி செய்து அன்று இந்த 21 நூல்களை திரியாக திரித்து இழை மாவில் வைத்து இழை எடுத்து கொள்வது வழக்கம். வீட்டுக்கு மூத்த ஆண்மகன் மற்றவர்களுக்கு இழை எடுத்து தருவார்கள். பெண்கள் பாசிபருப்பு பணியாரம், வடை, வகைவகையான பொரிகள் தயாரித்து அனைவருக்கும் வழங்கி விரதத்தை முடித்து வைப்பார்கள். இதுவே பழங்கால வழக்கம்.

இன்றைய மாறிவரும் பரபரப்பான வாழ்க்கை சூழலில் மேற்கூறியவாறு பண்டிகைகளை கொண்டாடி வருவது நடைமுறை சாத்தியமல்ல. இதனை மனதில் கொண்டு நகரத்தார்கள் தாங்கள் வாழ்ந்து வரும் ஊர்களிலேயே சங்கங்கள் அமைத்து இதில் முக்கியமான அம்சங்களை கைவிடாமல் இழை எடுத்துக்கொள்ளும் பழக்கம் ஆண்டுதோறும் தொடர்ந்து வருகிறது.

கார்த்திகை அல்லது மார்கழி மாதத்தில், சஷ்டி திதியும் சதய நட்சத்திரமும் கூடிவரும் நன்னாளில் உலகெங்கும் உள்ள நம் சமூகத்தினர்

பிள்ளையார் நோன்பை கொண்டாடி வருகிறார்கள். ஓரிரு வெளிநாடுகளில் மட்டும் இதனை விடுத்து அவர்களுக்கு தோதான ஒரு வார இறுதி நாளில் இழை எடுத்துக் கொள்வதாக அறிகிறோம்.

இவ்வாண்டு நம் சங்கத்தில் 25-12-2006 திங்கட்கிழமை (கிறிஸ்துமஸ் தினம்) அன்று நம் செந்தூல் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவில் செட்டியார்கள் மண்டபத்தில் பதிந்து கொண்ட உறுப்பினர்களுக்காக இழை எடுத்து கொள்ளும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. 280 உறுப்பினர்கள் மற்றும் நம் சமூகத்தை சேர்ந்தவர்களும் பதிந்து கொண்டு விநாயகப் பெருமானை துதித்து, புகழ் மாலை பாடி அவரின் அருளை வேண்டி இழை எடுத்து கொண்டனர். அன்று விடுமுறை என்பதால் வழக்கத்துக்கு மாறாக மாலை 6.00 மணிக்கே தொடங்கி முன்னதாக 9.30க்கு விழா இனிதே நிறைவுற்றது.

வீடுகளில் இழை எடுத்துக் கொள்வோர் சிறிது சிறிதாக குறைந்து வருதவால், நம் சங்கத்தில் இழை எடுத்துக் கொள்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்த ஆண்டும் இக்குழுவில் திரு. Y.RM. ஆண்டியப்பன், திரு. மா. சேதுராமன், திரு. முரு. கணேசன் ஆகியோர் இணைந்து பணியாற்றினார்கள்.

இந்நிகழ்வினை நடத்துவதற்கு அனுமதி வழங்கிய செயற்குழுவிற்கும், இழையை எடுத்துக் கொடுத்த பெரியவர்கள் திரு. சொ. சிவலிங்கம் செட்டியார் அவர்களுக்கும், திரு. ராம. மாணிக்கம் செட்டியார் அவர்களுக்கும் செட்டியார்கள் மண்டபத்தை தந்து உதவிய காரியக்காரர் அவர்களுக்கும், ஒத்துழைப்பு வழங்கிய உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுக்கும், பெருந்திரளாக வந்து இழை எடுத்து கொண்டு நகரத்தார்களுக்கும் எங்கள் நன்றி.

இங்ஙனம்,
பிள்ளையார் நோன்பு
ஏற்பாட்டுக்குழுவினர்

---

# வருந்துகிறோம்

புதுப்பட்டி திரு. பழ. சிதம்பரம் செட்டியார் அவர்களின் மனைவியும், புக்கிட் மெர்தாஜம் DR. சிவஞானம் (உ.எண்: 0293/ப.எண்: 304) சுங்கைப்பட்டாணி திருமதி ராதா பழனியப்பன், கோலத்திரங்கானு திருமதி மீனா வெங்கடாசலம் ஆகியோரின் தாயாருமாகிய திருமதி மங்கையர்க்கரசி ஆச்சி அவர்கள் கடந்த 2-11-2006 அன்று தமிழகத்தில் சிவபதவி அடைந்தார்கள்.

***பிரிந்தவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறது.***



# புதுமணத் தம்பதிகள்

கூலிம் (தமிழகம் மகிபாலன் பட்டி) திரு. RM. தண்ணீர்மலை-திருமதி சீதா லெட்சுமி தண்ணீர்மலை (உ.எண் 285/ப.எண்: 338) தம்பதிகளின் மகன் செல்வன் சுப்பிரமணியம் @ இராமநாதனுக்கும் பினாங்கு (தமிழகம் காரைக்குடி)) திரு. S. சுவாமி நாதன்-திருமதி வள்ளியம்மை சுவாமி நாதன் (உ.எண்: 118/ப. எண்: 332) தம்பதிகளின் மகள் செல்வி மெய்யம்மை (எ) வள்ளியம்மைக்கும் கடந்த 8-2-2007 அன்று தமிழகம் காரைக்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

தைப்பிங் (தமிழகம் மகிபாலன் பட்டி) திரு. M.AL.L. அண்ணாமலை செட்டியார்-திருமதி அ. இராஜேஸ்வரி ஆச்சி (உ.எண்: 0144/ப.எண்: 100) தம்பதிகளின் மகன் செல்வன் லெட்சுமணனுக்கும் தமிழகம் குளிபிறையைச் சேர்ந்த திரு. தெ. மு. ராம. மு. பழநியப்பன் செட்டியார் அவர்களின் மகள் செல்வி உமையாளுக்கும் கடந்த 9-2-2007 அன்று தமிழகம் குளிபிறையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

**புதுமணத் தம்பதிகள் வாழ்வில் எல்லா நலன்களும் பெற்று இன்பமுடன் பல்லாண்டு வாழ சங்கம் வாழ்த்துகிறது.**

# பாராட்டும் பெருமையும்

கோலாலம்பூரைச் சேர்ந்த டத்தோ டாக்டர் நா. ஆறுமுகம் (உ.எ: 717/ப.எ: 106) உலக மருத்துவ சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதை அறிந்து சங்கம் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது. 80 நாடுகள் அங்கம் வகிக்கும் இச்சங்கத்தில் வளர்ந்து வரும் நாட்டை சேர்ந்த ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது பெருமைக்குரிய ஒன்று. இவர் ஏற்கனவே மலேசிய மருத்துவ சங்கத்தின் தலைவராகவும், Confideration of Medical Association in Asia & Oceanaவில் நிர்வாகக்குழு உறுப்பினராகவும், Commonwealth மருத்துவ சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினராகவும், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மருத்துவ சங்கத்தின் துணை தலைவராகவும் பணியாற்றி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அழைப்புக்கு நன்றி



கிள்ளான் ஸ்ரீ நகர தண்டாயுதபாணி கோவில் திருக்கார்த்திகை பூஜை கடந்த 3-12-2006 அன்று வெகுசிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவுக்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய கிள்ளான் நாட்டுக் கோட்டை நகரத்தார்களுக்கு நம் நன்றி.

சித்தியவான் அருணகிரிநாதர் விழா கடந்த 30-12-2006 மற்றும் 31-12-2006 அன்று அருள்மிகு சுப்பிரமணியர் ஆலயம், சித்தியவானில் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவிற்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய அருணகிரிநாதர் திருச்சபை விழாக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் திரு. மா. திருநாவுக்கரசு @ அரசு அவர்களுக்கு நன்றி.

யங்கோன் நாட்டுக்கோட்டை நகரத் தண்டாயுதபாணி கோவில் தைப்பூச விழா 31-1-2007 முதல் 2-2-2007 வரை சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவுக்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய யங்கோன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கோவில் தர்ம பரிபாலன சபைக்கு நன்றி.

அலோர்ஸ்டார் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில் மாசி மக உற்சவத் திருவிழா 3-03-2007 அன்று சிறப்பாக நடைபெற உள்ளது. இத்திருவிழாவிற்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய அலோஸ்டார் நகரத்தார்களுக்கு நன்றி

CHANGE OF ADDRESS

| M. No. | P.No. | Name and address |
|---|---|---|
| 563 | 220 | N.Nagarajan<br>39, Jalan SM 5<br>Taman Sunway Batu Caves<br>68100 Batu Caves<br>Tel: 03-6189 5567 |

மலாக்கா சன்னாசிமலை ஆண்டவர் கோவில் மாசி மக திருவிழா 3-3-2007 அன்று சிறப்பாக நடைபெற உள்ளது. இத்திருவிழாவுக்கு அழைப்பு அனுப்பிய மலாக்கா மாநகர நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு நன்றி.

தமிழகம் சென்னை பவழக்காரத்தெரு தனவைசிய நகரத்தார் விடுதிகளில் அருள் பாலிக்கும் ஸ்ரீ தெண்டாயுதபாணி சுவாமி திருவொற்றியூர்க்கு எழுந்தருளி, அங்கு மாசி மக விழா 27.2.2007 முதல் 3-3-2007 வரை நடைபெற உள்ளது. இத்திரு விழாவிற்கு சங்கத்துக்கு அழைப்பு அனுப்பிய பழைய தெண்டாயுதபாணி டிரஸ்டிகளுக்கு நன்றி.

திருவெற்றியூரில் நடைபெறும் மகேஸ்வர பூஜைக்கு நன்கொடை தரவிரும்புபவர்கள் PAZHAYA THANDAYUTHAPANI TRUST (114, CORAL MERCHANT STREET, CHENNAI 600001) என்ற பெயருக்கு டிராப்ட் எடுத்து அனுப்புமாறு பழைய தெண்டாயுதபாணி டிரஸ்டிகள் கேட்டுக் கொள்கிறார்கள்.

# NEW MEMBERS

| M. No. | Name and address |
|---|---|
| 1082 | R.Annamalai<br>TB 3890, Lorong Fortune 2,<br>Taman Fortune, Jalan Kuhara Batu 3 1/2,<br>91000 Tawau, Sabah<br>Tel.019-880 3345 |
| 1083 | R.Alagammai<br>63A-2-1, Colonede Condominium,<br>Jalan Kebajikan, 88300 Kota Kinabalu,<br>Sabah. Tel. 088-242 477 / 019-860 7209 |
| 1084 | P.Thevarayan<br>16, Lorong Serampang 2,<br>Taman Emas, 41100 Kelang<br>Tel. 03-3372 7210 / 014-633 6842 |
| 1085 | K.Ramanathan<br>78, Jalan Bayan 4, Bandar Puchong Jaya,<br>47100 Puchong<br>Tel. 03-8075 5841 / 012-289 6145 |
| 1086 | R.Lakshmanan<br>276, Lorong Permai, Jalan Parit Masjid,<br>82000 Pontian<br>Tel. 07-686 2617 / 012-779 2786 |
| 1087 | Dr.P.Kannappan<br>205, Lorong Maarof, Bangsar,<br>59000 Kuala Lumpur<br>Tel. 03-2092 5205 |
| 1088 | P.Sivasankaran<br>100, Jalan Limau Purut, Off Jalan Maarof,<br>Bangsar Park, 59000 Kuala Lumpur<br>Tel. 03-2094 6397 / 012-601 3260 |
| 1089 | Dr.Sekkapan Thannirmalai<br>19, Lorong Gendang, Tamana Sri Aman,<br>14200 Sungai Bakap, Pulau Penang<br>Tel. 04-582 4664 / 012-411 6548 |
| 1090 | A.Nachiappan<br>219, Jalan Ara, Bangsar Baru,<br>59100 Kuala Lumpur<br>Tel. 03-2282 7916 / 012-322 0124 |
| 1091 | A.Alamelu<br>501, Block B 7, Section 2, Wangsa Maju<br>53300 Kuala Lumpur |
| 1092 | Ramesh Krishnamoorthy<br>84, Lengkok Siakap 5, Seberang Jaya<br>13700 Prai<br>Tel. 04-390 2972 / 019-692 2825 |
| 1093 | Visalakshi Chokkalingam<br>A 2-2-04 Blok Jati, Desa Putra Apartments<br>68100 Batu Caves<br>Tel. 012-314 9021 / 012-535 3744 |
| 1094 | Nagappan Sekar @ Vedanayagam<br>1, Jalan Pekan Baru, Taman Eng Ann<br>41150 Kelang<br>Tel. 03-3341 7655 / 012-790 6401 |

## NEW LIFE MEMBERS

| M. No. | P. No. | Name |
|---|---|---|
| 0993 | 214 | C. Nadaraja, Kuantan |
| 1082 | - | R.Annamalai, Sabah |
| 1083 | - | R.Alagammai, Sabah |
| 1084 | - | P.Thevarayan, Kelang |
| 1085 | - | K.Ramanathan, Puchong |
| 1086 | - | R.Lakshmanan, Pontian |
| 1087 | - | Dr.P.Kannappan, Kuala Lumpur |
| 1088 | - | P.Sivasankaran, Kuala Lumpur |
| 1089 | - | Dr.Sekkapan Thannirmalai, Sungai Bakap |
| 1090 | - | A.Nachiappn, Kuala Lumpur |
| 1091 | - | P.Alamelu, Kuala Lumpur |
| 1092 | - | Ramesh Krishnamoorthy, Prai |
| 1093 | - | Visalakshi Chokkalingam, Batu Caves |
| 1094 | - | Nagappan Sekar @ Vedanayagam, Kelang |